**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 154/2016**

| | | DEPOSITION OF WITNESS | PW.1 |
|---|---|---|---|
| NAME | ரகமதுனிசா | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 15.06.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

1. என்ன பரிகாரம்கேட்டு வழக்குப் போட்டுள்ளேன் என்றால் அடிக்கடி சண்டை போட்டு பள்ளம் தோண்டி வைத்துள்ளார்கள் அதற்காக வழக்குப் போட்டுள்ளேன். இந்த வழக்கை நான் போட வில்லை என்றாலும் என் சார்பாக பவர் ஏஜென்ட் அர்சத் அகமது வழக்குப் போட்டுள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும்விஸ்திரணம் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண் 556 விஸ்திரணம் 1 ஏக்கரா 3 செண்ட்.

2. எப்போது மனைப்பிரிவுகளாக போட்டோம் என்றால் தேதி ஞாபகமில்லை சுமார் 15 வருடம் இருக்கும். எனது பெரிய மகனுக்கு பவர் கொடுப்பதற்கு முன்பு மனை பிரிக்கப்பட்டதா அல்லது பின்னர் பிரிக்கப்பட்டதா என்றால் பவர் கொடுக்கப்பட்டதற்கு பின்னர் மனைகளாக பிரிக்கப்பட்டது. இந்த வழக்கு போட்ட தேதிக்கு முன்பே மனைகள் விற்கப்பட்டிருந்ததா என்றால் 30 மனைகள் விற்கப்பட்டிருந்தது.

3. விற்கப்பட்ட 30 மனைகளில் வீடுகள் கட்டியுள்ளார்களா என்றால் கட்டியுள்ளார்கள். 1 ஏக்கரா 3 செண்டில் 30 மனைகள் விற்பனை செய்த பிறகு என்னிடம் 20 மனைகள் தான் இருந்தது என்றால் சரிதான். நான் விற்பனை செய்த சொத்திற்கு உரிமை கொண்டாட முடியுமா என்றால் இல்லை. இந்நிலையில் 20 மனைகளுக்கு உட்பட்ட அளவு நிலத்திற்கு மட்டும் வழக்கு தாக்கல் செய்யாமல் மொத்த 1 ஏக்கரா 3 செண்ட்க்கும் சேர்த்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் பிரச்சனை செய்ததால் தாக்கல் செய்துள்ளேன்.

4. இந்த வழக்கிற்கு வியாஜித மூலமே இல்லை என்றாலும் நான் சொல்வது போல் பிரதிவாதிகள் எப்போதும் தடை செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3ல் உள்ள அப்சல் பாசா எனது மூத்தார் மகன், அர்சத் பாசா எனது மகன். அர்சத் பாசா மனைவி சாபனா யார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணப்படி நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றாலும் வா.சா.ஆ.3 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 அடங்கல் உரிய வட்டாட்சியரிடம் சான்று பெற்று தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் மற்றும் இந்த வழக்கிற்கு பின்னிட்டு பெற்றுத் தாக்கல் செய்ததால் அந்த ஆவணம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் படி நான் தாவா சொத்தின் மீது எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. எந்த தேதியில் பிரதிவாதிகள் பிரச்சனை செய்தார்கள் என்றால் தேதி கவனத்தில் இல்லை. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் பேர்ணாம்பட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். குடியாத்தத்திற்கு என் அம்மா வீட்டு கல்யாணத்துக்கு வந்தபோது புல்டோசர் வைத்து பள்ளம் செய்ததாக கேள்விப்பட்டேன்.

6. எனது மகன் தாவாவில் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த விவரத்தை சொல்லி உள்ளார் என்றால் சொல்லி உள்ளார். எனது மகன் தான் புகார் கொடுத்தார். இந்த வழக்கில் புகார் நகலை போடவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்ததற்கு ஆதரவாக காவல் நிலையத்திலிருந்து ரசீது பெற்றேனா என்றால் எனது மகனுக்கு தான் தெரியும். இந்த வழக்கு குறித்து எனது மகனுக்குத்தான் தெரியும் என்றாலும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை எனது மகனும் வழக்கறிஞரும் தயார்செய்து நான் கையெழுத்துப்போட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

7. இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு தொந்தரவு கொடுக்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானவை என்றாலும் அதனால் தாவாவானது செலவுத் தொகையோடு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நாங்கள் சுவாதினத்திலும் உரிமையிலும் இல்லாத சொத்திற்கு முகாந்திரம் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் அதனால் தான் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH
Date: 2026.06.15 19:46:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.